**கவனிக்க.-** இந்த வர்த்தமானியின் பகுதி VI இல் 2019 ஆம் ஆண்டிற்கான கொழும்பு மாவட்டத்திற்குரிய நீதாசன வலயங்களின் யூரிமார் பெயர்ப்பட்டியலொன்று சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் பிரசுரிக்கப்படுகின்றது.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2128 - 2019 ජූනි මස 14 වැනි සිකුරාදා - 2019.06.14

*2128 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு யூன் மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (அ) - மாகாணசபை

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - | பதவிகள் - வெற்றிடம் | 1106 |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1110 |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - | கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | - | ஆதன விற்பனைகள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| துணைவிதிகள் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.-** (i) சம்பளச் சபைகள் (திருத்தம்) சட்டமூலம், 2019, யூன் 07 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிப் பத்திரிகையின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(ii) குடிவருவோர், குடியகல்வோர் (திருத்தம்) சட்டமூலம், 2019, யூன் 07 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிப் பத்திரிகையின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** *அதாவது 2019, யூலை மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2019, யூன் மாதம் 21 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# பதவிகள் - வெற்றிடம்

## மேல் மாகாண பிரதான செயலாளர் அலுவலகத்தில் வரவேற்பு அலுவலர் பதவிக்கு ஆட்சேர்த்தல்

மேல் மாகாண பிரதான செயலாளர் அலுவலகத்தில் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பமல்லாத - தொகுதி 02 சேவைப் பிரிவின் வரவேற்பு அலுவலர் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக தேவையான தகைமைகளை பூர்த்தி செய்துள்ள மேல் மாகாணத்தில் வசிக்கும் இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. **சம்பளக் குறியீடு** : MN - I 2016 (அ. நி. சு. நி. 03/2016 இற்கு ஏற்ப)
சம்பள அளவு : ரூபா 27,140 - 10X300 - 11X350 - 10X495 - 10X660 - ரூபா 45,540/-
(அ. நி. சு. நி. 03/2016 இன் அட்டவணை II இற்கேற்ப சம்பளம் வழங்கப்படும்)

02. **இணைத்துக்கொள்ளப்படும் தரம்** : III தரம்

03. **சேவை நிபந்தனைகள்** : இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதியமுடையது. (ஓய்வூதியம் தொடர்பாக அரசினால் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் கொள்கைத் தீர்மானங்களுக்கு கீழ்ப்படிதல் அவசியம்.)

04. **ஆட்சேர்ப்புத் தகைமைகள்** :

4.1 கல்வித் தகைமைகள்
சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, கணிதத்துடன் மேலும் இரண்டு பாடங்களுக்கு திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு பாடங்களில் (06) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) பரீட்சையில் குறைந்தது ஒரு பாடமாவது (01) (பொதுப் பரீட்சை தவிர) சித்தியடைந்திருத்தல்.

4.2 உடற் தகுதி
பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான உடல் மற்றும் உள ஆரோக்கியத்தினைக் கொண்டிருத்தல்.

4.3 வேறு

4.3.1 இலங்கைப் பிரசையாயிருத்தல்

4.3.2 சிறந்த நடத்தையுடையவராயிருத்தல்

4.3.3 விளம்பரத்தில் குறிப்பிடப்பட்ட விண்ணப்ப முடிவுத் தினத்தில் ஆகக்குறைந்தது 03 வருடங்கள் மேல் மாகாணத்தில் தொடரான வசிப்பிடத்தினை உறுதிப்படுத்துதல் அவசியம்.

4.3.4 விண்ணப்ப முடிவுத் தினத்தில் 18 வயதிற்குக் குறையாமலும் 30 வருடத்திற்கு மேற்படாமலும் இருத்தல்.

4.3.5 இணைத்துக்கொள்வதற்கு அவசியமான அனைத்துத் தகுதிகளும் விண்ணப்ப முடிவுத் தினத்தில் பூர்த்தி செய்யப்படல் அவசியம்.

05. **இணைத்துக் கொள்ளும் முறை** :

தகுதியுடைய விண்ணப்பதாரிகள் கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வு மூலம் இணைத்துக்கொள்ளப்படுவர்.

| பாடம் | புள்ளிகள் | தேர்வு செய்வதற்கான ஆகக்குறைந்த புள்ளிகள் |
|---|---|---|
| அரசியல், கலாச்சார, சமூக மற்றும் பொருளாதார விடயங்கள் தொடர்பான பொது அறிவு | 30 | 50% |
| பதவியின் கடமைகள் தொடர்பான பொதுவான விளக்கம் | 30 | |
| மக்கள் தொடர்பு | 25 | |
| மொழித் தேர்ச்சி - தாய் மொழி தவிர்ந்த வேறு மொழிகளை பேசும்/இயலுமை | 10 | |
| ஆளுமை | 5 | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | |

06. **விண்ணப்பிக்கும் முறை :**

6.1 விண்ணப்பம் இவ் அறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு ஏற்ப தயாரித்து, பூர்த்தி செய்து, "ஆளனி மற்றும் பயிற்சிப் பிரிவு" பிரதான செயலாளர் அலுவலகம், 204, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல எனும் முகவரிக்கு 2019.07.14 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில் அல்லது நேரடியாக சமர்ப்பிக்கலாம். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "மேல் மாகாண பிரதான செயலாளர் அலுவலகத்தில் வரவேற்பு அலுவலர் பதவி" எனக் குறிப்பிடப்படல் வேண்டும். முழுமையாகப் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் மற்றும் முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

6.2 விண்ணப்பம் அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, கிராம அலுவலர், பொலிஸ் சேவையின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பதவியிலுள்ள அலுவலர், முப்படையின் அதிகாரி அதிகாரமுள்ள அலுவலர், ரூ. 498, 960/- அல்லது அதற்கு அதிகமான வருடாந்த சம்பளம் பெறும் அரசாங்க /மாகாண அரசாங்க சேவையிலுள்ள அலுவலர் ஒருவரினால் அத்தாட்சிப் படுத்தப்படல் வேண்டும்.

07. இவ்வறிவித்தலில் குறிப்பிட்ட அல்லது குறிப்பிடப்படாத ஏதாவதொரு விடயம் தொடர்பாக சிக்கல்கள் தோன்றுமாயின் அது மேல் மாகாண பிரதான செயலாளரினால் தீர்மானிக்கப்படும்.

பிரதீப் யஸரத்ன,
பிரதான செயலாளர்.

பிரதான செயலாளர் அலுவலகம்,
மேல் மாகாணம்.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**பிரதான செயலாளர் அலுவலகத்தில் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பமல்லாத - தொகுதி 02 சேவைப்பிரிவின் வரவேற்பு அலுவலர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்தல்**

(அலுவலக உபயோகத்துக்காக)

01. (i) முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்)

..................................................................................................................................

(ii) முழுப் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்): ..........................................................................

(iii) முழுப் பெயர் (சிங்களத்தில்): ......................................................................

02. தேசிய ஆள் அடையாள அட்டை இல. :

03. நிரந்தர வதிவிட மாவட்டம் : (கூட்டினுள் ✓ அடையாளமிடுக)

கொழும்பு ☐ கம்பஹா ☐ களுத்துறை ☐

04. நிரந்தர முகவரி : ...........................................................................................................................

05. தொலைபேசி இலக்கம் : ............................................................

06. பிறந்த திகதி : ..............................................................

07. 2019.07.14 ஆந் திகதியில் வயது : .............................................................

08. பால் : ஆண் ☐ பெண் ☐ (கூட்டினுள் ✓ அடையாளமிடுக)

09. கல்வித் தகைமைகள் :
க. பொ. த. (சா.த.) பரீட்சை :
வருடம் : ............ பரீட்சைச் சுட்டெண்: ..........

| தொ. இல. | பாடங்கள் | பெற்றுள்ள தரம் |
|---|---|---|
| 01. | | |
| 02. | | |
| 03. | | |
| 04. | | |
| 05. | | |
| 06. | | |
| 07. | | |
| 08. | | |
| 09. | | |
| 10. | | |

07. கல்வித் தகைமைகள் :
க. பொ. த. (உ.த.) பரீட்சை
வருடம் : ............ பரீட்சைச் சுட்டெண்: ..........

| தொ. இல. | பாடங்கள் | பெற்றுள்ள தரம் |
|---|---|---|
| 01. | | |
| 02. | | |
| 03. | | |
| 04. | | |

10. ............................................................................. ஆகிய நான் இதில் தரப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவையெனவும் சரியானவையெனவும் உறுதிப்படுத்துகிறேன். இதில் தரப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானது எனத் தெரியவரின் நான் நியமனத்திற்கு தகுதியற்றவனாவேன் எனவும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட முடியும் எனவும் நான் நன்கறிவேன்.

................................,
விண்ணப்பதாரியின் கையொப்பம்

திகதி ................................

11. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :

இவ்விண்ணப்பதாரி திரு./திருமதி/செல்வி ................................................................ என்பவரை எனக்குத் தனிப்பட்ட முறையில் அறிவேன் எனவும், அவர் எனது முன்னிலையில் ...................................... ஆந் திகதி ஒப்பமிட்டார் எனவும் அத்தாட்சிப்படுத்துகிறேன்.

அத்தாட்சிப்படுத்துபவரின் முழுப்பெயர் : ..........................................................................................

ஒப்பம் : .....................................................

பதவி மற்றும் முத்திரை : .....................................................

விலாசம் : .....................................................

(விண்ணப்பம் அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, முப்படையின் அதிகாரி அதிகாரமுள்ள அலுவலர், பொலிஸ் சேவையின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பதவியிலுள்ள அலுவலர், ரூ. 498,960/- அல்லது அதற்கு அதிகமான வருடாந்த சம்பளம் பெறும் அரசாங்க/மாகாண அரசாங்க சேவையிலுள்ள அலுவலர் ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும்.)

06 -435

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## வடமேல் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

## வடமேல் மாகாண அரசாங்க சேவையின் இலங்கைத் தொழில்நுட்ப சேவையின் கால்நடை அபிவிருத்தி ஆலோசகர் III ஆம் தர பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2019

வடமேல் மாகாண அரசாங்க சேவையின் இலங்கைத் தொழில்நுட்ப சேவையின் கால்நடை அபிவிருத்தி ஆலோசகர் III ஆம் தர பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு இந்த அறிவித்தலில் குறிப்பிடப்படும் தகைமைகளைக் கொண்ட வடமேல் மாகாணத்தினுள் நிரந்தர வதிவைக் கொண்ட இலங்கையரான ஆண், பெண்பாலாரிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இந்தப் பரீட்சை வடமேல் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவினால் 2019 ஆம் ஆண்டு யூலை மாதம் குருநாகல் நகரில் அமைக்கப்படும் பரீட்சை நிலையம் ஒன்றில் நடைபெறும் என்பது இத்தால் அறிவிக்கப்படுகிறது. பரீட்சையைப் பிற் போடுவதற்கும், இரத்துச் செய்வதற்கும் வடமேல் மாகாண சபை அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவிற்கு அதிகாரம் உள்ளது.

**1. சம்பள அளவுத் திட்டம்.**

இப் பதவிக்கான சம்பள அளவுத் திட்டம் MN - 03 - 2016 இன் அடிப்படையில்
ரூபா 31,040-10x445-11x660-10x730-10x750- ரூபா 57,550/= ஆகும்.
(2016.02.25 ஆம் திகதி 03/2016 ஆம் இலக்கம் கொண்ட அரசாங்க நிர்வாக சுற்று நிருபம் I இன் அடிப்படையில்)
எனினும் 2020.01.01 ஆம் திகதி வரை மேற் கூறப்பட்ட சுற்று நிருபத்தின் உப பகுதி II இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஆகும்.

**2. கல்வி மற்றும் தொழிற் தகைமைகள் :**

2.1. கல்வித் தகைமைகள் :-

க.பொ.த (உ.த.)

இரசாயனவியல், உயிரியல், பௌதீகவியல், விவசாயம் ஆகிய பாடங்களில் மூன்று பாடங்கள் உள்ளடங்களாக கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் அல்லது மேற்கூறிய பாடங்களில் 02 உடன் விவசாயத் தொழில்நுட்பவியல் பாடம் உட்பட மூன்று பாடங்களில் பொதுத் தராதரப் பத்திர ( உயர் தரப் ) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்

மற்றும்

க.பொ.த. (சா.த.)
சிங்களம் / தமிழ் / ஆங்கிலம் உள்ளடங்களாக விஞ்ஞானம், கணிதம் மற்றும் மற்றொரு பாடம் உட்பட திறமைச் சித்திகள் 04 உடன் ஒரே தடவையில் 06 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.

2.2. தொழிற் தகைமைகள் :-

I. அரசினால் அங்கீகரிக்கப்பட்ட கால்நடை வளர்ப்புக் கல்லூரி ஒன்றினால் வழங்கப்படும் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட கால்நடை மேலான்மை தொடர்பான தேசிய டிப்ளோமா சான்றிதழைப் பெற்றிருத்தல்.

அல்லது

II. மொரட்டுவ பல்கலைக்கழகம் அல்லது அம்பாறை ஹாடி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழில் நுட்பவியல் டிப்ளோமா

அல்லது

III. மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிறுவனம் ஒன்றினால் வழங்கப்படும் இரு வருட விவசாய டிப்ளோமா

அல்லது

IV. தொழிற் துறைக்கு ஏற்புடைய தேசிய தொழில் தகைமை ( NVQ ) 06 மட்டத் தகைமையைப் பெற்றிருத்தல். (முன்னுரிமை வழங்குவது மிருக கட்டுப்பாடு டிப்ளோமாவிற்காகும். குறித்த தகைமை பெறாதவர்கள் இல்லை என்றால் மாத்திரம் மேற்கூறப்பட்ட 2.2 இன் தொடர் இலக்கம் II, III மற்றும் IV குறிப்பிட்ட சான்றிதழ் பற்றி கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படும்)

2.3. உடற் தகைமைகள் :-

எல்லா விண்ணப்பதாரிகளும் வடமேல் மாகாணத்தின் எப்பகுதியிலும் சேவையாற்றுவதற்கும், பதவிக்குரிய பணிகளை மேற்கொள்வதற்கும் போதுமான உடல், உள தகைமையைக் கொண்டிருக்க வேண்டும்.

2.4. ஏனையவை :-

I. வடமேல் மாகாண அதிகாரப் பிரதேசத்தினுள் ஆகக் குறைந்தது 03 வருடங்களுக்கு குறையாத காலத்திற்கு நிலையான வதிவைக் கொண்ட இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும். ( வதியும் கிராம அலுவலர் பிரிவின் கிராம அலுவலரால் வழங்கப்பட்ட, பிரதேச செயலாளரினால் கையொப்பம் இடப்பட்ட வதிவுச் சான்றிதழ் ஒன்றின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். )

II. சிறந்த நடத்தையுடையவராக காணப்பட வேண்டும்.

III. மதப் பிரிவொன்றின் துறவியொருவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமையற்றவராவார்.

IV. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகயான 19.07.2019 ஆம் திகதிக்கு முன்னர் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான சகல தகைமைகளையும் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

V. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 18 வயதுக்குக் குறையாதவராகவும், 35 வயதுக்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும்.

**3. சேவை நிபந்தனைகள் :-**

3.1. இப்பதவி நிரந்தரமானது. உங்களுக்கு உரித்தான ஓய்வூதியம் முறை தொடர்பில் அரசாங்கம் எதிர்காலத்தில் மேற்கொள்ளும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு நீங்கள் கட்டுப்பட வேண்டும்.

3.2. இப்பதவிக்கு நியமனம் செய்யப்படுவது மூன்று ( 03 ) வருட நன்னடத்தைக் காலத்திற்கு உட்படுத்தப்பட்டாகும் என்பதுடன், அவரின் நன்னடத்தைக் காலத்தினுள் தனது பணிகள் மற்றும் நடத்தை திருப்திகரமான மட்டத்தில் பேணிச் சென்று, முதலாவது வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைந்தும் இருப்பின் அந்த சேவையில் நிரந்தரமாக்கப்படுவதற்கு அவசியமான எல்லா தேவைகளும் பூரணப்படுத்தப்பட்டிருப்பின் நன்னடத்தைக் கால முடிவில் அவரது சேவை நிரந்தரமாக்கப்படும்.

3.3. அரசாங்க நிர்வாக சுற்று நிருபம் 01/2014 இன் படியும் அதன் தொடர்ச்சியான சுற்று நிருபங்களின் படியும் பணியிலமர்ந்து 05 வருடங்களுக்குள் பணியில் இணைந்த மொழிக்கு மேலதிகமாக மற்றைய அரசகரும மொழியில்/மொழிகளில் தேர்ச்சி பெறல் வேண்டும்.

3.4. ஆங்கில மொழி தொடர்பில் க.பொ.த (சா.த.) திறமைச் சித்தி அளவிலான தேர்ச்சியை III ஆம் தரத்தில் 05 வருடங்கள் கடப்பதற்கிடையில் பெற்றுக் கொள்ள வேண்டும்.

3.5. இந்தப் பதவிக்குரிய நியமனம் செய்தல் செயற் கோவையின் விதிமுறைகளுக்கு மேலதிகமாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளுக்கும், நிதி சார் விதிமுறைகளுக்கும் வடமேல் மாகாண நிதி ஒழுங்குக் கோவையின், வடமேல் மாகாண ஒழுக்காற்றுக் கோவை, வடமேல் மாகாண சபை ஒழுங்கு விதிமுறைகள், திணைக்கள கட்டளைகள், வடமேல் மாகாண தொழில் நுட்ப சேவை யாப்புக்கும், அரசாங்கம் மற்றும் வடமேல் மாகாண சபை மூலம் விதிக்கப்படும் ஏனைய ஏற்பாடுகளுக்கும், கட்டளைகளுக்கும் கட்டுப்பட்டுப் பணியாற்ற உத்தியோகத்தர் கடப்பாடுடையவராக இருக்கின்றார்.

**4. ஆட்சேர்ப்புச் செய்யும் முறை :**

வடமேல் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக் குழு மூலம் நடாத்தப்படும் எழுத்து மூலப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும். பரீட்சை பாடத்திட்டத்தில் காட்டப்பட்டுள்ள ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் 40% க்கு மேல் புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளும் பரீட்சார்த்திகளைத் தெரிவு செய்து அந்த புள்ளிகளின் கூட்டுத் தொகையின் அடிப்படையில் முன்னுரிமைப் பட்டியல் தயாரிக்கப்படும். அந்தப் பட்டியல் வரிசைப் படி வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு சமனான எண்ணிக்கையினர் சாதாரண நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு தகுதியானவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள். நேர்முகப் பரீட்சைக்காக புள்ளிகள் எதுவும் வழங்கப்பட மாட்டாது என்பதுடன் தகைமைகள் பரிசீலிக்கப்படல் மாத்திரம் நடைபெறும்.

**5. எழுத்துப் பரீட்சை :**

5.1. எழுத்துப் பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கில மொழி மூலங்களில் நடாத்தப்படுவதுடன், விண்ணப்பிக்கும் மொழி மூலத்தை மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

5.2. இப் பரீட்சை இரு வினாப்பத்திரங்களை உள்ளடக்கியது. விரிவான பரீட்சைப் பாடத்திட்டம் பின்வருமாறு.

| வினாப் பத்திரம் | காலம் | மொத்தப் புள்ளி | சித்திப் புள்ளி |
|---|---|---|---|
| 1. பொது உளச் சார்பு | 01 மணித்தியாலம் | 100 | 40% (குறைந்தது) |
| 2. அகநிலை தொழில்நுட்பப் பரீட்சை | 01 1/2 மணித்தியாலம் | 100 | 40% (குறைந்தது) |

பரீட்சைப் பாடத் திட்டம்

1. பொது உளச் சார்பு
கணித ஆற்றல் மற்றும் தர்க்கத் திறனைப் மதிப்பீடு செய்ய உத்தேசிக்கப்படுகிறது.

2. அகநிலை தொழில்நுட்பப் பரீட்சை
பால் மாடு வளர்ப்பு, ஆடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு, பன்றி வளர்ப்பு, இலங்கை பசுக்கள் இனப் பெருக்க கொள்கை, இலங்கையில் பால் மாடு வளர்ப்புக்கான சாத்தியம், பண்ணை முகாமைத்துவம், பால் வேதியியல், உணவு நற்காப்பு, பால் துணை உற்பத்திகளை மேற்கொள்ளல், கால்நடை வளர்ப்பிற்கான பொறியியல், செயற்றிட்ட கற்கை, புல் வளர்ப்பு தொடர்பான விடயங்களை வினவும் வினாப் பத்திரமாகும்.

**6. பரீட்சைக் கட்டணம் :**

பரீட்சைக் கட்டணமாக ரூ. 600/- ஐ வடமேல் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் வருமானத் தலைப்பு 2003-02-13 இல் வரவு வைக்கப்படுமாறு வடமேல் மாகாணத்தில் தமது நிலையான வதிவைக் கொண்ட பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர் காரியாலயத்தில் அந்த நிதியைச் செலுத்த வேண்டும். அவ்வாறு பணம் செலுத்திப் பெற்றுக் கொண்ட வமே.மா.ச.நி 2 பற்றுச் சீட்டினை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். அவ்வாறு பணம் செலுத்தி பெற்றுக் கொள்ளும் பற்றுச் சீட்டு தவிர, வேறு நிறுவனங்களில் செலுத்தி பெற்றுக் கொள்ளும் பற்றுச் சீட்டுகள் அல்லது காசுக் கட்டளைகள் பொறுப்பேற்கப்பட மாட்டாது. (பற்றுச் சீட்டின் நிழற் படப்பிரதி ஒன்றை தம்வசம் வைத்திருத்தல் எதிர் காலத்தில் பயன்படலாம்.) எக்காரணம் கொண்டும் செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் மீளச் செலுத்தப்பட மாட்டாது என்பதையும் இந்தப் பரீட்சைக் கட்டணம் வேறு பரீட்சை ஒன்றுக்கு மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது என்பதையும் கவனத்தில் கொள்ளவும்.

**7. விண்ணப்பிக்க வேண்டிய முறை :**

7.1. இந்த அறிவித்தலின் இறுதியில் உள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு இசைவாக A4 தாளில் இரண்டு பக்கங்களையும் பயன்படுத்தி தயாரிக்கப்படல் வேண்டும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 19.07.2019 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் **"செயலாளர், வடமேல் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு, மாகாண சபை அலுவலகத் தொகுதி, குருநாகல்"** என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். விண்ணப்பப் படிவத்தை உள்ளடக்கி அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"வடமேல் மாகாண அரசாங்க சேவையின் இலங்கைத் தொழில் நுட்ப சேவையின் கால்நடை அபிவிருத்தி ஆலோசகர் III தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்தல் - 2019"** எனக் குறிப்பிடப்பட வேண்டும்.

7.2. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்.
இந்த உறுதிப்படுத்தல் அரசாங்கப் பாடசாலை ஒன்றின் அதிபர் /சமாதான நீதவான் /சத்தியப் பிரமாண ஆணையாளர் /சட்டத்தரணி /இராணுவத்தின் அல்லது விமானப் படையின் அதிகாரி அல்லது ரூபா 32,960/- அல்லது அதற்கு மேற்பட்டதோ அரசின் உயர்ந்த மாதாந்த அடிப்படைச் சம்பளத்தைப் பெற்றுக் கொள்ளும் நிரந்தரமான அரசாங்க /மாகாண அரசாங்க சேவையின் நிறைவேற்று உத்தியோகத்தர் ஒருவர் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

7.3. விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி 19.07.2019 ஆகும்.

7.4. மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைவில்லாத, குறித்த தினத்திற்கு முன்னர் பணம் செலுத்தத் தவறிய, தாமதமாகக் கிடைக்கின்ற, தெளிவற்ற, பூரணமற்ற மற்றும் தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் முன் அறிவிப்பின்றி நிராகரிக்கப்படும். மேலும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவம் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தை ஒத்ததா என்பதை உறுதி செய்து கொள்தல் விண்ணப்பதாரியின் பொறுப்பாகும். முறையாக

விண்ணப்பத்தை பூர்த்தி செய்யாமையால் ஏற்படும் நட்டங்களுக்கு விண்ணப்பதாரியே பொறுப்பாளர் ஆவார். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவத்தின் நிழற் பிரதி ஒன்றைத் தம்வசம் வைத்திருப்பது பயனளிக்கலாம். விண்ணப்பம் கிடைக்கப் பெற்றமை அறிவிக்கப்பட மாட்டாது.

8. போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான அனுமதிச் சீட்டு அனுப்பப்படுதல் என்பது விண்ணப்பதாரி இந்தப் பதவிக்கான தகைமையைப் பெற்றுள்ளார் என்பதை ஏற்றுக் கொண்டமை ஆகாது. தகைமைகளை உறுதிப்படுத்துவதற்காக உரிய ஆவணங்களின் மூலப் பிரதிகள் நேர்முகப் பரீட்சையின் போது முன்வைக்கப்படல் வேண்டும்.

9. பரீட்சார்த்திகளின் அடையாளத்தை உறுதி செய்தல்
பரீட்சார்த்திகள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் ஆளடையாளத்தை உறுதி செய்ய பின்வரும் ஆவணங்களின் மூலம் உறுதி செய்ய வேண்டும்
(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை
(ஆ) செல்லுபடியான கடவுச் சீட்டு

குறிப்பு :- பரீட்சை மண்டபத்தில் தமது அடையாளத்தை உறுதிப்படுத்த விண்ணப்பதாரி தவறினால் அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதியற்றவராகக் கருதப்படுவார்.

10. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரிகள் மாத்திரமே விண்ணப்பித்துள்ளார்கள் என்ற எடுகோளின் அடிப்படையில் பரீட்சைக் கட்டணத்தை உரிய திகதியில் அல்லது அதற்கு முன்னர் செலுத்தி விண்ணப்பித்துள்ள சகல விண்ணப்பதாரிகளுக்கும் வடமேல் மாகாண சபை அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவின் செயலாளரால் பரீட்சை கால அட்டவணையுடன் அனுமதி அட்டை வழங்கப்படும். விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்ட உடனேயே வடமேல் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவின் அலுவலக இணையத் தளத்தில் (www.psc.nw.gov.lk) அறிவித்தல் விடுக்கப்படும். பரீட்சை அறிவித்தல் வெளியிடப்பட்டு 03 நாட்கள் கழிந்த பின்னரும் பரீட்சை அனுமதிச் சீட்டு கிடைக்கப் பெறாதவர்கள் அது தொடர்பில் உடனடியாக வடமேல் மாகாண சபை அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளரிற்கு பின்வரும் விபரங்களுடன் அறிவிக்க வேண்டும். பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகளினால் பரீட்சை நிலைய மேற்பார்வையாளருக்கு அவர்களின் கையொப்பத்தை உறுதிப்படுத்திய அனுமதிப் பத்திரத்தினை ஒப்படைக்க வேண்டும்.

I. பரீட்சையின் பெயர் :
II. விண்ணப்பதாரியின் முழுப் பெயர் :
III. தேசிய ஆள் அடையாள அட்டை எண் :
IV. முகவரி :
V. விண்ணப்பத்தை தபாலிலிட்ட திகதி மற்றும் பதிவு பற்றிய தகவல்கள்.

11. ஏதேனும் ஒரு விண்ணப்பதாரி தகுதியற்றவர் என அறியப்பட்டால் பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எந்தச் சந்தர்ப்பத்திலும் அவரது அபேட்சகத்துவத்தை செல்லுபடியற்றதாக்க முடியும். நியமனம் வழங்கப்பட்ட பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் போலியான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது என்பது அல்லது சரியான தகவல்கள் வேண்டுமென்றே மறைக்கப்பட்டுள்ளது என்பது தெரிய வந்தால் சேவையிலிருந்து நீக்கப்படுவார்.

12. இந்தப் பரீட்சையை நடாத்துதல், நடாத்தாது விடுதல் அல்லது நடாத்திய பின்னர் தெரிவு செய்தல் /தெரிவு செய்யாமல் விடல் அல்லது வெற்றிடங்களின் எண்ணிக்கை தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுத்தல் வடமேல் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவிற்கு உரியதாகும். இந்த அறிவித்தலில் குறிப்பிடப்படாத ஏதேனும் ஒரு விடயம் தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கும் உரிமை வடமேல் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவிற்கு உரியதாகும்.

13. சிங்கள, தமிழ், ஆங்கில மொழி மூலங்களில் வெளியிடப்படும் அறிவித்தல்களில் சொற்றொடர்களிடையே இணக்கமின்மைகள் அல்லது பொருத்தமின்மைகள் காணப்படுமாக இருப்பின் அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி மூல அறிவித்தல் சரியானதாகக் கருதப்படும்.

வட மேல் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நியமத்திற்கு ஏற்ப,

**ஆர். எம். ஆர். எம். ஏக்கநாயக்க,**
செயலாளர்,
வடமேல் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு.

மாகாண சபை அலுவலகத் தொகுதி,
குருநாகல்.
2019, யூன் 10.

மாதிரி விண்ணப்பப்படிவம்

அலுவலக உபயோகத்திற்காக மாத்திரம்.

**வடமேல் மாகாண அரசாங்க சேவையின் இலங்கைத் தொழில்நுட்ப சேவையின் கால்நடை அபிவிருத்தி ஆலோசகர் III ஆம் தர பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2019**

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் ( உரிய கூட்டினுள் ✓ அடையாளத்தை இடுக )

சிங்களம் - ☐ தமிழ் - ☐ ஆங்கிலம் - ☐

1. 1.1. முதலெழுத்துக்களுடன் பெயர் ( சிங்களம் /தமிழில் ) :- திரு./திருமதி/செல்வி
.................................................................................................

1.2. முதலெழுத்துக்களுடன் பெயர் ( ஆங்கில கப்பிடல் எழுத்துக்களில் ) : Mr./Ms./Mrs. :-
.................................................................................................

1.3. முழுப் பெயர் ( சிங்களத்தில் /தமிழில் ) :- திரு./திருமதி/செல்வி ..........................................
.................................................................................................

1.4. முழுப் பெயர் (ஆங்கில கப்பிடல் எழுத்துக்களில் ) : Mr./Ms. Mrs. :- ..........................................
.................................................................................................

1.5. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :- ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

2. 2.1. நிரந்தர முகவரி ( சிங்களம் / தமிழில் ) :- ..........................................
.................................................................................................

2.2. நிரந்தர முகவரி ( ஆங்கில கப்பிடல் எழுத்தில் ) :-..........................................
.................................................................................................

2.3. அனுமதிப் பத்திரம் அனுப்ப வேண்டிய முகவரி :- ..........................................
.................................................................................................

2.4. தொலைபேசி இலக்கம் :- ..........................................

3. 3.1. பால் : பெண் F: ☐ ஆண் M: ☐

3.2. பிறந்த திகதி :- ஆண்டு: ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

3.3. 19.07.2019 ஆம் திகதிக்கு வயது : வருடங்கள் : ☐☐☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

4. 4.1. விண்ணப்பதாரி வதியும் நிர்வாக மாவட்டம் :- ..................................................................

4.2. பிரதேச செயலாளர் பிரிவு :- ..................................................................

4.3. கிராம அலுவலர் பிரிவு :- ..................................................................

5. கல்வி மற்றும் தொழில் தகைமைகள்

5.1. க. பொ. த (சா. த.) பரீட்சை தொடர்பான விபரங்கள்

பரீட்சைக்குத் தோற்றிய ஆண்டு, மாதம் :- ..........................

சுட்டெண் :- ..........................

| | பாடம் | தரம் | | பாடம் | தரம் |
|---|---|---|---|---|---|
| 1 | | | 6 | | |
| 2 | | | 7 | | |
| 3 | | | 8 | | |
| 4 | | | 9 | | |
| 5 | | | 10 | | |

5.2. க. பொ. த (உ. த) பரீட்சை தொடர்பான விபரம்

பரீட்சை ஆண்டு மற்றும் மாதம் :- ..........................................

சுட்டெண் :- ......................................

| | பாடம் | தரம் |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |

5.3. தொழிற் தகைமைகள்

| நிறுவனம் | கற்றுள்ள பாடநெறி | காலப் பகுதி | பெறுபேறு | சான்றிதழ் இலக்கம் மற்றும் திகதி |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

6. பரீட்சைக் கட்டணம் செலுத்தியமை தொடர்பான விபரங்கள்

6.1. பற்றுச் சீட்டு இலக்கம் :- ........................ தொகை :- ....................

திகதி :- .........................

வழங்கிய பிரதேச செயலகம் :- ......................................

பற்றுச் சீட்டை இங்கே ஒட்டவும்

7. விண்ணப்பதாரியின் உறுதியுரை

(அ) இந்த விண்ணப்பப் படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் நான் அறிந்த வகையில் உண்மையானது, சரியானது எனவும், இங்கு ஒரு பகுதி பூரணப்படுத்தப்படாமை மற்றும் பிழையாக பூரணப்படுத்துவதால் ஏற்படக் கூடிய நட்டங்களை ஏற்றுக் கொள்வதற்கு உடன்படுகிறேன்.

(ஆ) என்னால் வழங்கப்படும் உறுதியுரை பொய்யானது என உறுதிப்படுத்தப்பட்டால் பதவிக்கு நியமனம் பெறுவதற்கு முன்னர் தகுதியற்றவராவேன் என்பதையும், பதவிக்கு நியமிக்கப்பட்ட பின்னால் பதவியில் இருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

திகதி :- ................................. ..........................................................

விண்ணப்பதாரியின் கையொப்பம்

08. விண்ணப்பதாரரின் ஒப்பத்தை உறுதிப்படுத்தல்.

இந்த விண்ணப்பத்தை முன்வைக்கும் திரு./திருமதி/செல்வி ............................................ ....................................... என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்பதையும், அவர் ........................ ஆம் திகதி என் முன்னிலையின் ஒப்பமிட்டார் என்பதையும் உறுதி செய்கிறேன்.

உறுதிப்படுத்துபவரின் பெயர் :- .......................................

கையொப்பம் :- .......................................

பதவி, உத்தியோகபூர்வ முத்திரை :- ................................

திகதி :- .......................................

(விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம் அரசாங்க பாடசாலை ஒன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, முப்படையின் அதிகாரி, பொலிஸ் சேவையின் வர்த்தமானியில் இடப்பட்ட பதவி ஒன்றை வகிக்கும் ஒரு உத்தியோகத்தர், அல்லது ரூ. 395,520/- க்கு மேற்பட்ட தொகையை வருடாந்த அடிப்படைச் சம்பளமாகப் பெற்றுக் கொள்ளும் நிரந்தரமான அரசாங்க சேவையின் நிறைவேற்று உத்தியோகத்தர் ஒருவர் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.)

06 - 791

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.